**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, LALGUDI.**

**Case No. CC.No.62 of 2016**

**Prosecution Witness : PW8**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : பாஸ்கரன் | **Caste** | : |
| **Father's Name** | : | **Calling** | : |
| **Village** | : | **Religion** | : |
| **Taluk** | : | **Age** | : |

**(A1 to A3 present)**

**Dated.22.08.2023.**

**முதல் விசாரணை**

நான் தற்போது திருச்சி மாவட்டத்தில் தனிப்பிரிவு குற்ற புலனாய்வு துறையில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். வழக்கு சம்பவத்தில் இலால்குடி காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வந்தேன். கடந்த 13.05.2015 ம் தேதி இலால்குடி காவல் நிலையத்தில் நிலைய பொறுப்பில் இருந்த போது திருச்சி அரசு மருத்துவமனையிலிருந்து வந்த தகவலை பெற்று மருத்துவமனை சென்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த கலியசுந்தரம் என்பவரிடமிருந்து புகார் வாக்குமூலம் பெற்று பின் நிலையம் வந்து நிலைய குற்ற எண்.211/2015, இதச பிரிவுகள் 294(b), 323, 324 ன் கீழ் 10 மணிக்கு வழக்கினை பதிவு செய்தேன். முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.4** ஆகும். வழக்கினை விசாரணைக்கு எடுத்து கொண்டு அன்றைய தினம் காலை 11 மணியளவில் சம்பவ இடம் சென்று சாட்சிகள் குமார் மற்றும் சரவணன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார்

செய்தேன். பார்வை மகஜர் **அ.சா.ஆ.5** ஆகும். மாதிரி வரைபடம் **அ.சா.ஆ.6** ஆகும். பின்பு பட்டியல் சாட்சிகளான 1 முதல் 5 வரை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். சாட்சிகள் விசாரணையிலிருந்து சம்பவம் உண்மை என்று தெரிந்ததால் இவ்வழக்கின் 1ம் எதிரியான கருணாநிதி என்பவரை 13.05.2015ம் தேதி காட்டுர் பேருந்து நிலையம் அருகே நின்று கொண்டிருந்ததாக கிடைத்த தகவலின் பேரில் அங்கு சென்று அவரை அடையாளம் கண்டு குற்ற காரணம் கூறி 13 மணிக்கு கைது செய்து நிலையம் கொண்டு வந்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். இவ்வழக்கில் காயம்பட்ட நபருக்கு சிகிச்சையளித்த மருத்துவர் ராணி மற்றும் ராஜலெட்சுமி ஆகியோர்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். மருத்துவர் ராஜலெட்சுமி என்பவர் கலியசுந்தரத்திற்க்கு வழங்கப்பட்ட விபத்து பதிவேடு **அ.சா.ஆ.7** ஆகும். கலியசுந்தரம் என்பவரை மீண்டும் விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். மருத்துவர் கொடுத்த காயச்சான்றிதழில் கலியசுந்தரத்திற்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என சான்று வழங்கியதால் சட்டப்பிரிவை 294(b), 323, 324லிருந்து 294(b), 323, 324, 325 ஆக மாற்றம் செய்து நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை **அ.சா.ஆ.8** ஆகும். வழக்கு விசாரணையை முடித்து 1ம் எதிரி மீது 294(b), 325 இதசவின் படியும், 2ம் எதிரி மீது 294(b), 324 இதசவின் படியும், 3 மற்றும் 4 எதிரிகள் மீது 294(b), 323 இதசவின் படியும் குற்ற இறுதி அறிக்கை தயார் செய்தேன்.

<u>குறுக்கு விசாரணை (எதிரிகள் தரப்பில்)–</u>

13.05.2015க்கு முன்பு மருத்துவமனை மற்றும் காயம்பட்ட நபரிடமிருந்து தகவல் மற்றும் புகார் எதுவும் பெறப்பட்டதா என்றால் ஞாபகமில்லை. அ.சா.1டம் புகார் வாக்குமூலம் பெறுவதற்கு 13.05.2015

அன்று தான் மருத்துவமனை சென்றேன் என்றால் சரிதான். அ.சா.1 சம்பந்தமான மருத்துவ குறிப்புகள் அனைத்தும் பெற்ற பின்பு தான் அ.சா.1 டம் புகார் வாக்குமூலம் பெற்றேன். அ.சா.ஆ.3 மற்றும் அ.சா.ஆ.7 ஆவணங்களில் அ.சா.1 12.05.2015 அன்றே மருத்துவமனையிலிருந்து விடுவிக்கப்பட்டதாக கண்டுள்ளது என்றால் சரிதான். அ.சா.ஆ.3 ஆவணத்தில் தெரிந்த 3 நபர்கள் தாக்கியதாக தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 12.05.2015 அன்றே அ.சா.1 விடுவிக்கப்பட்ட பின்பு 13.05.2015 அன்று அ.சா.1 டம் புகார் வாக்குமூலம் பெற்றதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அ.சா.1 26.04.2015 அன்று நடந்த வழக்கு சம்பவத்திற்கு 13.05.2015 அன்று காலதாமதமாக புகார் கொடுத்ததற்கான காரணத்தை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான், எதிரிகள் உறவினர்கள் என்பதால் சமாதானமாக செல்வதாக வாய்மொழியாக சொன்னார். அ.சா.1 என்னிடம் வாய்மொழியாக தான் புகார் கொடுத்தார். முதல் தகவல் அறிக்கை பத்தி 4 ல் எழுத்துமூலமான புகார் என்று தான் கண்டுள்ளது என்றால் சரிதான். வழக்கு சம்பவ இடத்திற்கு அருகில் உள்ள நபர்களை நான் தனிப்பட்ட சாட்சியாக இவ்வழக்கில் விசாரிக்கவில்லை என்றால் ஞாபகமில்லை. முதல் தகவல் அறிக்கை மற்றும் வாக்குமூலத்தில் சம்பவம் நடந்த போது அருகில் யாரும் இருந்ததாக குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரிதான். புகாரில் காலை 6.30 மணிக்கு கலியசுந்தரம் எதிரிகளை திட்டியதாக தான் உள்ளது என்றால் சரிதான். அ.சா.1 தனது வயலில் தடுமாறி கீழே விழுந்ததில் அவருக்கு கையில் எலும்புமுறிவு ஏற்பட்டது என்றும் அதை பயன்படுத்தி கொண்டு எதிரிகள் மீது பொய்யாக புகார் கொடுத்துள்ளார் என்றும் சொன்னால் சரியல்ல. எதிரிகளால் அ.சா.1 க்கு காயம் ஏற்பட்டிருந்தால் உடனடியாக புகார் கொடுத்திருப்பார் என்றால் சரியல்ல. அ.சா.1 கொடுத்த பொய்யான புகாரின் அடிப்படையில் நான் சரியாக புலன் விசாரணை

செய்யாமல் எதிரிகள் மீது குற்ற பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றும், எதிரிகளை முதல் விசாரணையில் சொல்லியுள்ளது போல் கைது செய்யவில்லை என்றும், அ.சா.1 க்கு ஏற்பட்ட காயத்திற்கும் எதிரிகளுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

ஒப்பம்/-செ.ராஜ்குமார்,
நீதித்துறை நடுவர்,(FAC)
இலால்குடி.

/உண்மை நகல்/

S RAJKUMAR Digitally signed by S RAJKUMAR Date: 2023.08.22 18:32:58 +0530

நீதித்துறை நடுவர்,(FAC)
இலால்குடி.